## வர்த்தகமும் சுற்றுலாவும்

ஏற்றுமதி வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், இறக்குமதிப் பாய்ச்சல் வீதத்தில் ஏற்பட்ட மெதுவான வீழ்ச்சி என்பனவற்றுடன் 1992 இல் வெளிநாட்டு வர்த்தகத் துறை பாராட்டத்தக்க செயலாற்றத்தினைப் பதிவு செய்துள்ளது. வேளாண்மை ஏற்றுமதிகளில் பின்னடைவு காணப்பட்ட போதும், மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1991 இன் 2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 20 சதவீதத்தினால்* வளர்ச்சியடைந்தன. அதேவேளை இறக்குமதிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் 13 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 10 சதவீதம் கொண்ட சிறிய மிதமான உயர்வினைப் பதிவு செய்தது. இதன் விளைவாக, வர்த்தகப் பற்றாக்குறை 1991 இன் சிஎஉ 7,470 இலட்சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 6,860 இலட்சத்திற்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றது. இவ்வபிவிருத்திகள், இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கான ஏற்றுமதி வருவாய்களின் விகிதம் 1991 இன் 66 சதவீதத்திலிருந்து 1992 இல் 72 சதவீதத்திற்கு உயர்வடையக் காரணமாயின.

தற்காலிக சுங்கத் தரவுகளின்படி, இறக்குமதிச் செலவுகள் சிஎஉ 24,250 இலட்சமாகவும் (ரூ. 1,497,800 இலட்சம்), ஏற்றுமதி வருவாய்கள் சிஎஉ 17,410 இலட்சமாகவும் (ரூ. 1,075,090 இலட்சம்) அமைந்து 1992 இல் சிஎஉ 6,850 இலட்சம் (ரூ. 422,720 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றாக் குறையை ஏற்படுத்தின. காலங்கடந்து பதிவு செய்யப்பட்டமைக்காகச் சுங்கத் தரவுகளை சீராக்குமிடத்து மொத்த இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் முறையே சிஎஉ 24,680 இலட்சமாகவும் (ரூ. 1,524,070 இலட்சம்) சிஎஉ 17,820 இலட்சமாகவும் (ரூ. 1,100,520 இலட்சம்) விளங்கின. இதன்படி, சீராக்கப்பட்ட தரவுகள் 1991 இன் பற்றாக்குறையான சிஎஉ 7,470 இலட்சத்துடன் (ரூ. 422,640 இலட்சம்) ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 6,860 இலட்சம் (ரூ. 423,550 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றாக்குறையைப் பிரதிபலித்தன.

### அட்டவணை 1.38

### வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம் 1990 — 1992

| ஆண்டு | வளர்ச்சி வீதங்கள் | | வர்த்தகக் குறிகாட்டிகள் (1985=100) | | விகிதம் | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | ஏற்றுமதி விலைகள் | இறக்குமதி விலைகள் | வர்த்தக மாற்று வீதம் | ஏற்றுமதிகள்/இறக்குமதிகள் |
| 1990 ... | 20.1 | 14.0 | 183.0 | 209.4 | 87.4 | 0.74 |
| 1991 ... | 2.0 | 13.0 | 186.4 | 217.5 | 85.7 | 0.67 |
| 1992 (அ) ... | 20.0 | 10.0 | 211.4 | 237.8 | 88.9 | 0.72 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

* வேறுவகையாகக் கூறப்பட்டாலன்றி சதவீத மாற்றங்களும் பங்குகளும் சிஎஉ பெறுமதிகளின் நியதிகளிலேயே உள்ளன.

1991 இல் காணப்பட்ட பாதகமான விலை அசைவுகளுக்கு நேர்மாறான தன்மையைப் பிரதிபலிக்கும் விதத்தில், தேயிலை, பெற்றோலிய உற்பத்திகள், அருங்கற்கள் மற்றும் அவை சார்ந்த கற்கள் தவிர்ந்த பெரும்பாலான ஏற்றுமதிப் பண்டங்களின் சராசரி விலைகள் 1992 இல் முன்னேற்றமடைந்தன. பொதுவான ஏற்றுமதி விலைச் சுட்டெண் ரூபா நியதிகளில் 13.4 சதவீதத்தினால் உயர்வடைந்தமை வேளாண்மை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 4.4 சதவீதமான அதிகரிப்பு, கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட 22.2 சதவீதமான அதிகரிப்பு என்பன வற்றினதும் கனிப்பொருள் உற்பத்திகளின் விலைகளில் ஏற்பட்ட 16.3 சதவீத மான வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். மறுபுறத்தில் பொதுவான இறக்கு மதி விலைச் சுட்டெண் ரூபா நியதிகளில் 9.3 சதவீதம் கொண்ட குறைவான வீதத்தில் உயர்வடைந்து முதலீட்டு, நுகர்வுப் பொருட்களின் விலைகள் முறையே 17.5 சதவீதத்தினாலும் 12.2 சதவீதத்தினாலும் அதிகரித்தமையினதும் இடை

அட்டவணை 1.39

**ஏற்றுமதிகள், இறக்குமதிகள், வர்த்தக நிலுவை 1981—1992**

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி௭உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | சுங்கத் தரவு | | | சீராக்கப்பட்ட தரவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் க.ஏ.பெ. (அ) | இறக்குமதிகள் கொ.கா.க. (ஆ) | வர்த்தக நிலுவை | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
| 1981 ... | 20,199 | 35,530 | – 15,331 | 21,043 | 36,583 | – 15,540 |
| | (891) | (1,567) | (–676) | (928) | (1,614) | (–686) |
| 1982 ... | 21,124 | 36,876 | – 15,751 | 21,454 | 41,946 | – 20,492 |
| | (919) | (1,605) | (–686) | (934) | (1,826) | (–892) |
| 1983 ... | 25,183 | 42,021 | – 16,838 | 25,096 | 45,558 | – 20,461 |
| | (1,001) | (1,670) | (–669) | (998) | (1,811) | (–813) |
| 1984 ... | 37,006 | 46,913 | – 9,908 | 37,347 | 47,541 | – 10,194 |
| | (1,419) | (1,799) | (–380) | (1,432) | (1,823) | (–391) |
| 1985 ... | 35,035 | 49,069 | – 14,034 | 36,207 | 54,049 | – 17,843 |
| | (1,268) | (1,776) | (–508) | (1,311) | (1,956) | (–646) |
| 1986 ... | 34,092 | 51,282 | – 17,189 | 34,072 | 54,559 | – 20,487 |
| | (1,036) | (1,559) | (–523) | (1,036) | (1,658) | (–623) |
| 1987 ... | 39,861 | 59,750 | – 19,889 | 41,133 | 60,528 | – 19,396 |
| | (1,046) | (1,568) | (–522) | (1,080) | (1,589) | (–509) |
| 1988 ... | 47,092 | 70,320 | – 23,228 | 46,928 | 71,030 | – 24,102 |
| | (1,101) | (1,645) | (–543) | (1,098) | (1,661) | (–564) |
| 1989 ... | 55,511 | 75,353 | – 19,842 | 56,175 | 80,225 | – 24,050 |
| | (1,202) | (1,631) | (–430) | (1,216) | (1,737) | (–521) |
| 1990 ... | 76,624 | 105,559 | – 28,936 | 79,481 | 107,729 | – 28,248 |
| | (1,408) | (1,940) | (–532) | (1,461) | (1,980) | (–519) |
| 1991 ... | 82,225 | 127,831 | – 45,606 | 84,378 | 126,643 | – 42,264 |
| | (1,453) | (2,258) | (–806) | (1,491) | (2,237) | (–747) |
| 1992 ... | 107,509 | 149,780 | – 42,272 | 110,052 | 152,407 | – 42,355 |
| | (1,741) | (2,425) | (–685) | (1,782) | (2,468) | (–686) |

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) மீள் ஏற்றுமதியின் பெறுமதியும் உட்பட.

(ஆ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.

மாற்றல் வீதங்கள் 1991—1 சி௭உ.=ரூ. 56.6101
1992—1 சி௭உ.=ரூ. 61.7541

நிலைப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியினதும் முழுத் தாக்கத்தினைக் காட்டியது. இவ் விலை அபிவிருத்திகள் 1992 இல் வர்த்தக மாற்று விகிதத்தில் முன்னைய ஆண்டின் 2 சதவீதம் கொண்ட மோசமடைந்த தன்மையுடன் ஒப்பிடுகையில் 3.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை விளை வித்தது.

**ஏற்றுமதிகள்**

*1992 இல் இலங்கையின் ஏற்றுமதித் துறை கலப்பான தன்மையைக் கொண்டிருந்தது. தேயிலை ஏற்றுமதிகள் ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய நீண்ட வரட்சியின் பாதகமான தாக்கம், தேயிலைக்கான உலக சந்தையில் காணப்பட்ட மந்த நிலைமைகள் என்பன காரணமாகப் பெருமளவிற்குப் பாதிக் கப்பட்டன. மறுபுறத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்க ஆற்ற லைக் காட்டி 37 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தன. சீராக்கப் பட்ட சுங்கத் தரவுகளின்படி, 1992 இல் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 20 சதவீதத்தினால் வளர்ச்சியுற்று சிஎஉ 17,820 இலட்சத்தினை (ரூ. 1,100,520 இலட்சம்) அடைந்தன. இது, 1991 இல் பதிவு செய்யப்பட்ட சிஎஉ 14,910 இலட்சத்திலிருந்து (ரூ. 843,780 இலட்சம்) குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற் பட்டமையைப் பிரதிபலித்தது. தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட 24 சதவீதமான வீழ்ச்சி கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வரு வாய்களினாலும் அதேபோன்று இறப்பர், தெங்கு, சிறு வேளாண்மை உற்பத்தி கள் போன்ற ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான உயர்வான வருவாய் களினாலும் பெருமளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. கைத்தொழில் ஏற்றுமதி களிலிருந்தான வருவாய்கள் 1991 இன் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 37 சதவீதத்தினால் உயர்வடைந்தன. பெற்றோலிய உற்பத்திகள் நீங்கலாக, கைத்தொழில் ஏற்றுமதிகளின் அனைத்து முக்கிய வகைகளும் பாராட்டத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்ததுடன், இதில் பெரும்பங்கு மொத்தக் கைத் தொழில் ஏற்றுமதிகளில் 69 சதவீதத்திற்கு வகைகூறும் புடவை மற்றும் ஆடைகள் துறைகளிலிருந்தே கிடைத்தது. அதேவேளை கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந் தான வருவாய்கள் 1991 இன் 30 சதவீதம் கொண்ட பெருமளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதத்தினால் மிகச் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது.*

*கூடியளவிற்குப் பன்முகப்படுத்தப்பட்ட ஏற்றுமதி அமைப்பினை நோக்கி மேலும் முன்னேறும் விதத்தில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு 1991 இன் 60 சதவீதத்திலிருந்து 1992 இல் 69 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் 1977 இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் நான்கில் மூன்று பங்கிற்கு வகை கூறிய வேளாண்மை ஏற்றுமதிகளின் பங்கு 1992 இல் 24ச தவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1986 இல் மிகப்பெரும் ஏற்றுமதி விடயமாக உருப்பெற்ற புடவைகளும் ஆடைகளும், தனியொரு விடய மாக அதன் முன்னணி நிலைமையை வலுப்படுத்திக் கொண்டு மொத்த ஏற்றுமதி களில் அதன் பங்கினை 1991 இன் 39 சதவீதத்திலிருந்து 1992 இல் 48 சத வீதத்திற்கு அதிகரித்துக் கொண்டது.*

## அட்டவணை 1.40

### ஏற்றுமதிகளின் அமைப்பு 1990—1992

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சி.எ.உ. பத்து இலட்சம் | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992(இ) | 1990 | 1991 | 1992(இ) | 1990 | 1991 | 1992 |
| 1. வேளாண்மை ஏற்றுமதிகள் ... | 28,886 | 26,537 | 26,385 | 531 | 469 | 427 | 36.3 | 31.5 | 24.0 |
| 1.1. தேயிலை ... | 19,823 | 17,867 | 14,893 | 364 | 316 | 241 | 24.9 | 21.2 | 13.5 |
| 1.2. இறப்பர் ... | 3,080 | 2,641 | 2,960 | 57 | 47 | 48 | 3.9 | 3.1 | 2.7 |
| 1.3. தெங்கு ... | 2,783 | 2,619 | 3,691 | 51 | 46 | 60 | 3.5 | 3.1 | 3.4 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் | 1,842 | 1,769 | 2,665 | 34 | 31 | 43 | 2.3 | 2.1 | 2.4 |
| 1.3.2 ஏனையவை ... | 941 | 850 | 1,026 | 17 | 15 | 17 | 1.2 | 1.0 | 0.9 |
| 1.4 சிறுவேளாண்மை உற்பத்திகள் ... | 3,199 | 3,409 | 4,841 | 59 | 60 | 78 | 4.0 | 4.1 | 4.4 |
| 2. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி (அ) ... | 41,510 | 50,736 | 75,776 | 763 | 896 | 1,227 | 52.2 | 60.1 | 68.9 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும்... | 25,163 | 33,261 | 52,588 | 462 | 588 | 852 | 31.6 | 39.4 | 47.8 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 3,974 | 3,289 | 2,771 | 73 | 58 | 45 | 5.0 | 3.9 | 2.5 |
| 2.3 ஏனையவை ... | 12,374 | 14,185 | 20,417 | 227 | 250 | 331 | 15.5 | 16.8 | 18.6 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதிகள் ... | 3,484 | 2,562 | 2,749 | 64 | 45 | 45 | 4.4 | 3.0 | 2.5 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 2,933 | 2,358 | 2,482 | 54 | 42 | 40 | 3.7 | 2.8 | 2.3 |
| 3.2 ஏனையவை ... | 551 | 204 | 267 | 10 | 4 | 4 | 0.7 | 0.2 | 0.2 |
| 4. வகைப்படுத்தப்படாதவை (ஆ) ... | 5,601 | 4,543 | 5,142 (ஈ) | 103 | 80 | 83 | 7.1 | 5.4 | 4.6 |
| மொத்த ஏற்றுமதிகள் (அ) ... | 79,481 | 84,378 | 110,052 | 1,461 | 1,491 | 1,782 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) சீராக்கப்பட்டது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(இ) தற்காலிகமானவை
(ஈ) விற்கப்பட்ட கப்பலொன்றின் பெறுமதியையும் உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

மாற்றல் வீதம்: 1990—1சிஎஉ.=ரூ. 54.4216
1991—1சிஎஉ.=ரூ. 56.6101
1992—1சிஎஉ.=ரூ. 61.7541

**தேயிலை**

வேளாண்மை ஏற்றுமதிகளிடையே, வெளியீட்டில் பெரும் பின்னடைவு காணப்பட்டபோதும் தேயிலை 1992 இன் வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதியில் 56 சதவீதத்திற்கும் மொத்த ஏற்றுமதிகளில், 14 சதவீதத்திற்கும் வகைகூறி முக்கிய ஏற்றுமதி உற்பத்திப் பொருளாகத் தொடர்ந்தும் விளங்கியது. தேயிலையின் ஏற்றுமதிப் பெறுமதி 1991 இன் சிஎஉ 3,160 இலட்சத்திலிருந்து (ரூ. 178,670 இலட்சம்) 1992 இல் சிஎஉ 2,410 இலட்சத்திற்கு (ரூ. 148,930 இலட்சம்) 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அளவு, விலை இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். தேயிலை ஏற்றுமதியின் அளவு 1991 இன் 2,120 இலட்சம் கி. கிறாம்களிலிருந்து 1992 இல் 1,820 இலட்சம் கி. கிறாம்களுக்கு 14 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சராசரி ஏற்றுமதி விலை இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் கி.கி. ஒன்றுக்கு சிஎஉ 1.49 இலிருந்து (கி.கி. ஒன்றுக்கு ரூ. 84.12) கி.கி. ஒன்றுக்கு சிஎஉ 1.33 இற்கு (கி.கி. ஒன்றிற்கு ரூ. 81.98) 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தேயிலை விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு மந்தமான உலக சந்தை நிலைமைகள் மற்றும் தரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவே முக்கிய காரணங்களாகும்.

**இறப்பர்**

இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 470 இலட்சத்திலிருந்து (ரூ. 26,410 இலட்சம்) 1992 இல் சிஎஉ 480 இலட்சத்திற்கு (ரூ. 29,600 இலட்சம்) 1991 இன் 18 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 2 சதவீதத்தினால் சிறிதளவிற்கு அதிகரித்தது இதற்கு, இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ஏற்றுமதி அளவு 760 இலட்சம் கி. கிறாம்களிலிருந்து 790 இலட்சம் கி. கிறாம்களுக்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை, இறப்பரின் சராசரி ஏற்றுமதி விலை கி. கிறாம் ஒன்றுக்கு சிஎஉ 0.61 இல் மாற்றமின்றியிருந்தது. இறப்பரிலிருந்தான மொத்த வருவாய்களில் தட்டை மற்றும் லேட்டெக்ஸ் கிறேப் வகைகள் 46 சதவீதத்திற்கும் 31 சதவீதத்திற்கும் வகைகூறிய வேளையில் கழிவு கிறேப், சோல் கிறேப் என்பன முறையே 13 சதவீதத்திற்கும் 5 சதவீதத்திற்கும் பங்களித்தன.

**தெங்கு**

தெங்கு உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1991 இன் சிஎஉ 460 இலட்சத்திலிருந்து (ரூ. 26,190 இலட்சம்) 1992 இல் சிஎஉ 600 இலட்சத்திற்கு அதிகரித்து (ரூ. 36,910 இலட்சம்) 1991 இன் 10 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 30 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கு அளவு, விலை இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். ஏற்றுமதி அளவிற்குச் சமமான காய்கள் 3,670 இலட்சம் காய்களிலிருந்து 4,120 இலட்சம் காய்களுக்கு 12 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, 1992 இல் காய்க்குச் சமமான சராசரி ஏற்றுமதி விலை காயொன்றிற்கு சிஎஉ 0.10 இற்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது. தெங்கு விலைகளில் ஏற்பட்ட மேல்நோக்கிய போக்கிற்கு, உலகில் தெங்கு உற்பத்திகளின் முக்கிய ஏற்றுமதியாளரான பிலிப்பைன்சின் உற்பத்தியில் ஏற்பட்ட மிகப் பெரும் வீழ்ச்சியின் விளைவாக உலக சந்தையில் தெங்கு உற்பத்திகளின் வழங்கல் குறைவடைந்தமையே காரணமாகும். 1992 இல் கயிற்றுத் தும்பு சிலிர்ப்புக்கள், கயிற்றுத் தும்பு மெத்தைகள், தும்புக் கயிறுகள் என்பனவற்றை உள்ளடக்கிய தெங்குத் துணை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் பெறுமதியும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

### சிறு வேளாண்மை உற்பத்திகள்

*1992 இல் சிறு வேளாண்மை உற்பத்திகள் துறையின் ஏற்றுமதிச் செய லாற்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டி 1991 இன் சிஎஉ 600 இலட்சத்திலிருந்து (ரூ. 34,090 இலட்சம்) 1992 இல் சிஎஉ 780 இலட்சத்திற்கு (ரூ. 48,380 இலட்சம்) அதிகரித்து 30 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் விளைவாக இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில், மொத்த ஏற்றுமதிகளில் சிறு வேளாண்மை உற்பத்திகளின் பங்கு 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1992 இல் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந் தான மொத்த வருவாய்களில் தயாரிக்கப்படாத புகையிலையும் கறுவாவும் முறையே 35 சதவீதத்திற்கும் 31 சதவீதத்திற்கும் வகை கூறின. பழங்கள், சாதிக்காயும் சாதிரிப்பத்திரியும், எள்ளு மற்றும் வெற்றிலை என்பனவற்றிலிருந் தான வருவாய்களிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. பழங்கள் மற்றும் வெற்றிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமை க்குத் திருந்திய பன்னாட்டு விலைகளே பெருமளவிற்குக் காரணமாக இருந்த வேளையில், தயாரிக்கப்படாத புகையிலை, கறுவா, சாதிக்காயும் சாதிரிப்பத்திரி யும், எள்ளு என்பனவற்றிலிருந்தான உயர்ந்த வருவாய்களுக்கு அதிகரித்த ஏற்று மதி அளவுகள் காரணமாக இருந்தன.*

### கைத்தொழில் ஏற்றுமதிகள்

*1992 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 8,960 இலட்சத்துடன் (ரூ. 507,360 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 12,270 இலட்சமாக (ரூ. 757,760 இலட்சம்) விளங்கி 37 சதவீதம் கொண்ட அதிகரிப் பினைக் காட்டியது. முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, புடவைகள், ஆடைகள் ஏற்றுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சிக்கான முக்கிய உதவு காரணியாக இருந்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் சிஎஉ 5,880 இலட்சத்திலிருந்து சிஎஉ 8,520 இலட்சத்திற்கு 45 சதவீதத்தினால் உயர்வடைந்தன. அதேவேளை வைரங்கள், உணவு, குடிபானமும் புகையிலையும், இரசாயன உற்பத்திகள், தோல் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் ஒன்றுசேர்ந்த வருவாய்களும் 32 சதவீதத்தினால் அதிகரித்தன. மாறாக, பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி 1991 இன் சிஎஉ 580 இலட் சத்திலிருந்து 1992 இல் சிஎஉ 450 இலட்சத்திற்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்ததுடன் இதற்கு, பேணல் நோக்கங்களுக்காகத் தூய்மி தற்காலிகமாக மூடப்பட்டமையின் காரணமாக ஏற்றுமதியின் அளவு வீழ்ச்சியடைந்தமையே முழுக் காரணமாகும்.*

### கனிப்பொருள் ஏற்றுமதிகள்

*கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1991 இன் சிஎஉ 450 இலட்சத்திலிருந்து (ரூ. 25,630 இலட்சம்) 1992 இல் சிஎஉ 440 இலட் சத்திற்கு (ரூ. 27,470 இலட்சம்) 2 சதவீதத்தினால் சிறிதளவுக்கு வீழ்ச்சியடைந் தன. இது முக்கியமாக, 1991 இன் சிஎஉ 420 இலட்சத்திலிருந்து (ரூ. 23,580 இலட்சம்) 1992 இல் சிஎஉ 400 இலட்சத்திற்கு (ரூ. 24,800 இலட்சம்) 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த இரத்தினக்கல் ஏற்றுமதியில் பிரதிபலித்தது. இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் உலோகத் தாதுக்கள், இரும்பு, கந்தகம், இயற் கைக் காரீயம் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய கனிப்பொருள்களின் ஏற்று மதிப் பெறுமதி சிஎஉ 40 இலட்சத்தில் மாற்றமின்றியிருந்தது.*

## இறக்குமதிகள்

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவினம் 1991 இன் சிஎஉ 22,370 இலட்சத்துடன் (ரூ. 1,266,430 இலட்சம்) ஒப்பிடுகையில் 1992 இல் சிஎஉ 24,680 இலட்சத்திற்கு (ரூ. 1,524,070 இலட்சம்) 10 சதவீதத்தினால் அதிகரித்தது. பெரும் அதிகரிப்புக்களானவை நுகர்வுப் பொருட்களில் குறிப்பாக அரிசி, மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், நீண்ட காலப் பாவனைக்குரிய நுகர்வுப் பொருட்கள், மற்றும் கோதுமைத் தானியம், இறுங்கு, இரசாயன உற்பத்திகள், சாயமூட்டல் மற்றும் நிறமூட்டல் பொருட்கள், புடவைகளும் துணிகளும் போன்ற இடைநிலைப் பொருட்களிலும் காணப்பட்டன.

1992 இல் இறக்குமதிகளின் உள்ளடக்கம் சிறிதளவு மாற்றத்தை மட்டுமே காட்டியது. முதலீட்டுப் பொருட்களின் பங்கு 24 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில், இடைநிலைப் பொருட்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்குமிடேயில் 51 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருட்களின் பங்கு 25 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது.

## நுகர்வுப் பொருட்கள்

நுகர்வுப் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவு 1991 இன் சிஎஉ 5,720 இலட்சத்திலிருந்து (ரூ. 323,570 இலட்சம்) 1992 இல் சிஎஉ 6,150 இலட்சத்திற்கு (ரூ. 379,950 இலட்சம்) 8 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டினைவிட 15 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த உணவல்லா விடயங்களில் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. அதேவேளை உணவு, குடிபானம் மீதான இறக்குமதிச் செலவு ஏறத்தாழ 1ச தவீதத்தினால் உயர்வடைந்தது.

1992 இல் உணவு மற்றும் குடிபானம் வகையின் கீழான இறக்குமதிகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்கதொரு பண்பு யாதெனில் சீனியின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அரிசி தொடர்பாக ஏற்பட்ட அதிகரிப்புமேயாகும். பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக உள்நாட்டு உற்பத்தி குறைவடைந்தமையினைத் தொடர்ந்து வழங்கல்களை உயர்த்தும் பொருட்டுச் சீனி மற்றும்அரிசி இரண்டினதும் இறக்குமதி அளவுகள் முறையே 3 சதவீதத்தினாலும் 77 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும் சீனி மற்றும் அரிசி இரண்டினதும் இறக்குமதி விலைகள் முறையே 14 சதவீதத்தினாலும் 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமை இறக்குமதிச் செலவினைக் கட்டுப்படுத்த உதவியது. சீனி மீதான இறக்குமதிச் செலவு 1991 இன் சிஎஉ 910 இலட்சத்திலிருந்து (ரூ. 51,390 இலட்சம்) 1992 இல் சிஎஉ 800 இலட்சத்திற்கு (ரூ. 49,520 இலட்சம்) வீழ்ச்சியடைந்த வேளையில் அரிசி இறக்குமதி மீதான செலவினம் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 280 இலட்சத்திலிருந்து (ரூ. 15,890 இலட்சம்) சிஎஉ 460 இலட்சத்திற்கு (ரூ. 28,520 இலட்சம்) உயர்வடைந்தது. 1992 இல் அனைத்து ஏனைய உணவு விடயங்களின் மீதுமான இறக்குமதிச் செலவு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.41

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1990—1992

| வகை | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சிஎஉ பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதியின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 (இ) | 1991 | 1992(அ) | 1990(இ) | 1991 | 1992(அ) | 1990 | 1991 | 1992 |
| 1. நுகர்வுப் பொருட்கள் ... | 28,420 | 32,357 | 37,995 | 522.2 | 571.6 | 615.3 | 26.4 | 25.5 | 24.9 |
| 1.1 உணவும் குடிபானமும் ... | 15,624 | 16,749 | 18.396 | 287.1 | 295.9 | 297.9 | 14.5 | 13.2 | 12.1 |
| 1.1.1 அரிசி ... | 1,758 | 1,589 | 2,852 | 32.3 | 28.1 | 46.2 | 1.6 | 1.3 | 1.9 |
| 1.1.2 மா ... | 1,387 | 1 | 3 | 25.5 | — | — | 1.3 | | — |
| 1.1.3 சீனி ... | 5,173 | 5,138 | 4,952 | 95.1 | 90.8 | 80.2 | 4.8 | 4.1 | 3.2 |
| 1.1.4 ஏனையவை ... | 7,306 | 10,020 | 10,589 | 134.2 | 177.0 | 171.5 | 6.8 | 7.9 | 6.9 |
| 1.2 ஏனையவை ... | 12,796 | 15,607 | 19,599 | 235.1 | 275.7 | 317.4 | 11.9 | 12.3 | 12.9 |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... | 55,757 | 64,265 | 76,701 | 1,024.6 | 1,135.2 | 1,242.0 | 51.8 | 50.7 | 50.3 |
| 2.1 பெற்றோலியம் ... | 14,372 | 12,887 | 13,938 | 264.1 | 227.6 | 225.7 | 13.3 | 10.2 | 9.1 |
| 2.2 வளமாக்கி ... | 2,958 | 2,430 | 2,366 | 54.3 | 42.9 | 38.3 | 2.7 | 1.9 | 1.6 |
| 2.3 இரசாயனம் ... | 4,754 | 3,643 | 4,146 | 87.3 | 64.3 | 67.1 | 4.4 | 2.9 | 2.7 |
| 2.4 கோதுமை ... | 3,791 | 3,303 | 4,549 | 69.7 | 58.3 | 73.7 | 3.5 | 2.6 | 3.0 |
| 2.5 புடவைகளும் ஆடையும் ... | 13,454 | 20,611 | 26,794 | 247.2 | 364.1 | 433.9 | 12.5 | 16.3 | 17.6 |
| 2.6 ஏனையவை ... | 16,428 | 21,391 | 24,908 | 301.9 | 377.9 | 403.3 | 15.2 | 16.9 | 16.3 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... | 23,412 | 29,792 | 37,596 | 430.2 | 526.3 | 608.8 | 21.7 | 23.5 | 24.7 |
| 3.1 பொறியும் கருவியும் ... | 9,885 | 11,881 | 17,200 | 181.6 | 209.9 | 278.5 | 9.2 | 9.4 | 11.3 |
| 3.2 போக்குவரத்துக் கருவி ... | 4,537 | 7,607 | 7,963 | 83.4 | 134.4 | 129.0 | 4.2 | 6.0 | 5.2 |
| 3.3 கட்டடப் பொருட்கள் ... | 6,365 | 6,840 | 8,012 | 116.9 | 120.8 | 129.7 | 5.9 | 5.4 | 5.3 |
| 3.4 ஏனைடவை ... | 2,265 | 3,464 | 4,421 | 48.2 | 61.2 | 71.6 | 2.4 | 2.7 | 2.9 |
| 4. பகுக்கப்படாதவை ... | 139 | 229 | 115 | 2.5 | 4.0 | 1.9 | 0.1 | 0.2 | 0.1 |
| மொத்த இறக்குமதிகள் (ஆ) ... | 107,729 | 126,643 | 152,407 | 1,979.5 | 2,237.1 | 2,468.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) சீராக்கப்பட்டது.
(இ) இறக்குமதிகள் மீள வகைப்படுத்தப்பட்டமையால் 1990 ஆம் ஆண்டின் எண்தொகைகள் 1990 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்ட எண் தொகைகளிலிருந்து மாறுபடுகின்றன.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.42

## 1992 இல் முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெற்றிக் தொன்கள்

| மாதம் | அரிசி | கோதுமை | சீனி | பெற்றோலியம் (மசகெண்ணெய்) | வளமாக்கி |
|---|---|---|---|---|---|
| சனவரி ... | 30,195 | 29,922 | 10,350 | 186,330 | 19,199 |
| பெப்புருவரி ... | 31,147 | 47,699 | 50,305 | 124,526 | 26,468 |
| மாச்சு ... | 5,268 | 52,028 | 7,673 | 58,199 | 26,587 |
| ஏப்பிறல் ... | 7,945 | 54,169 | 49,103 | 125,057 | 18,425 |
| மே ... | 8,465 | 51,514 | 2,753 | 187,200 | 46,148 |
| யூன் ... | 15,590 | 48,670 | 37,105 | — | 38,000 |
| யூலை ... | 18,447 | 153,526 | 79,470 | — | 35,734 |
| ஓகத்து ... | 6,704 | 49,831 | 22,205 | — | 22,454 |
| செத்தெம்பர் ... | 13,022 | 56,896 | 26,675 | 176,145 | 7,975 |
| ஒற்றோபர் ... | 36,145 | 62,518 | 23,450 | 126,434 | 26,215 |
| நவெம்பர் ... | 44,506 | 102,500 | 19,920 | 126,575 | 27,725 |
| திசெம்பர் ... | 19,789 | — | 41,043 | 186,052 | 44,591 |
| மொத்தம் (அ) ... | 237,223 | 709,273 | 370,052 | 1,296,518 | 339,521 |

(அ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்.

ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 1991 இன் சிஎஉ 2,760 இலட்சத்திலிருந்து (ரூ. 156,070 இலட்சம்) 1992 இல் சிஎஉ 3,170 இலட்சத்திற்கு (ரூ. 195,990 இலட்சம்) 15 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வகையில், அதிகரிப்புக்கள் உந்து ஊர்திகள் மற்றும் ஈருருளிகள் (6 சதவீதம்), வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் (18 சதவீதம்), இறப்பர் டயர் மற்றும் டியூப் (15 சதவீதம்), மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள் (28 சதவீதம்) ஏனைய நுகர்வுப் பொருட்கள் (15 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கிய அனைத்துத் துணைத் தொகுதிகளிலும் பதிவு செய்யப்பட்டன.

### இடைநிலைப் பொருட்கள்

1992 இன் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் சிஎஉ 12,420 இலட்சமாக (ரூ. 767,020 இலட்சம்) விளங்கி முன்னைய

ஆண்டினைவிட 9 சதவீதம் கொண்ட உயர்வினைக் காட்டியது. முக்கிய அதிகரிப்புக்கள் கோதுமை, இறுங்கு, தோற்பொருட்களுக்கான சாயம், சாயமூட்டல் பொருட்கள், நிறமூட்டல் பொருட்கள், புடவைகள், துணிகள், இரசாயனங்கள் என்பனவற்றின் மீது பதிவு செய்யப்பட்டன. கோதுமை, இறுங்கு இறக்குமதிகள் 1991 இன் சிஎஉ 580 இலட்சத்திலிருந்து (ரூ. 33,030 இலட்சம்) 1992 இல் சிஎஉ 740 இலட்சத்திற்கு (ரூ. 45,490 இலட்சம்) 28 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் சாயமூட்டல், தோல் பொருளுக்கான சாயம், நிறமூட்டல் பொருட்கள் என்பனவற்றின் இறக்குமதி சிஎஉ 160 இலட்சத்திலிருந்து (ரூ. 9,280 இலட்சம்) சிஎஉ 260 இலட்சத்திற்கு (ரூ. 15,840 இலட்சம்) 56 சதவீதத்தினால் உயர்வடைந்தன. அதேவேளை, புடவைகள் மற்றும் துணிகள் மீதான செலவினம் 1991 இன் சிஎஉ 3,640 இலட்சத்திலிருந்து (ரூ. 206,110 இலட்சம்) 1992 இல் சிஎஉ 4,340 இலட்சத்திற்கு (ரூ. 267,940 இலட்சம்) 19 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், இரசாயன உற்பத்திகள் மீதான செலவினமும் சிஎஉ 640 இலட்சத்திலிருந்து (ரூ. 36,430 இலட்சம்) சிஎஉ 670 இலட்சத்திற்கு (ரூ. 41,460 இலட்சம்) உயர்ந்து 14 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை இறச்குமதியின் அளவு 5 சதவீதத்தினாலும் (19,066 மெற்றிக் தொன்) விலைகள் 6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமை யின் இணைந்த விளைவாக வளமாக்கி இறக்குமதியின் பெறுமதி 11 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்தது.

**முதலீட்டுப் பொருட்கள்**

முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவு 1991 இன் சிஎஉ 5,260 இலட்சத்திலிருந்து (ரூ. 297,920 இலட்சம்) 1992 இல் சிஎஉ 6,090 இலட்சத்திற்கு (ரூ. 375,960 இலட்சம்) 16 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முக்கியமாக, இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 2,100 இலட்சத்திலிருந்து (ரூ. 118,810 இலட்சம்) சிஎஉ 2,790 இலட்சத்திற்கு (ரூ. 172,000 இலட்சம்) உயர்வடைந்த பொறிகள் மற்றும் கருவிகளின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட 33 சதவீத உயர்வில் பிரதிபலிக்கப்பட்டது. அதேவேளை போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவு 1991 இன் 61 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1992 இல் கட்டிடப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவு 7 சதவீதத் தினால் உயர்வடைந்தது.

**உள்நாட்டு வர்த்தகம்**

தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக சூழ்நிலையில், 1992 இல் உள்நாட்டு வர்த்தகக் கொள்கையானது மொத்த விற்பனை, சில்லறை விற்பனை நடவடிக்கைகள் இரண்டிலும் தனியார் துறை பங்கேற்பதற்கேற்ற ஊக்குவிப்புக்களை வழங்குகின்ற அதேவேளையில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்குத் தேவையான மட்டத்தினைப் பேணுதல் என்ற இரட்டைக் குறிக்கோள்களை அடைவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது. இக் குறிக்கோள்களை அடையும் பொருட்டு உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம், 1956 இன் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1979 இன் எண் 1 கொண்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1979 இன் நிறுத்தல் முகத்தலளவைக் கட்டளைத் திருத்தச் சட்டத்துடன் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்கள் என்பனவற்றின் ஏற்பாடுகளைத் தொடர்ந்தும் நிருவகித்து வந்தது.

1992 ஒற்றோபர் 1 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் பாண், கோதுமைமா என்பனவற்றின் மீதான விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. விலைக் கட்டுப்பாடுகள் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் உட்பட 60 இறக்கு மதியாளர்களினால் இறக்குமதி செய்யப்பட்ட ஏறத்தாழ 1,500 மருந்தாக்கல் உற்பத்திகளுக்குத் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. குறிப்பிட்ட தர நிருணயங்களைப் பேணும் நோக்குடன், ஈருருளிகளின் துணைப் பாகங்களைத் தயாரிப்பவர்களும் அதனை வர்த்தகம் செய்பவர்களும் இலங்கைக் கட்டளைகள் பணியகத்தின் விபரக் குறிப்புக்களைப் பேணி நடக்குமாறு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 6 (1) இன் கீழ் பணிப்புரைகள் வழங்கப்பட்டன. அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட 12 விடயங்கள் கட்டாய இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்ட வேளையில் இவ்வுற்பத்திகளின் உள்நாட்டுப் பதிலீடுகள் இலங்கைக் கட்டளைகள் பணியகத்தின் குறிப்பிட்ட விபரக் குறிப்புக்களைப் பின்பற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டன. தகரத்திலடைக்கப்பட்ட மீன், கட்டிப்பால், செயற்கைப் பழச் சாறு, உடன் பழச்சாறு, திரட்டிய பழச்சாறு, பிழியப்பட்ட பாணியும் பழச் சாறும், வீடுகளுக்கான மின் ஆழிகள், சொருகிகள், இணைப்புப் பொருத்திகள், மின்குமிழ் தாங்கிகள், பழுப்பு சீனி என்பன இவற்றில் சில உற்பத்திகளாகும்.

நுகர்வோர் கல்வியினூடாக நுகர்வோர் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான மேலுமொருநடவடிக்கையாகத் தீவு முழுவதற்குமான நுகர்வோர் அமைப்பினை உருவாக்குவதற்கு உள்நாட்டு வர்த்தகத் திணைக்களத்தினால் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் கிராமிய மட்டத்தில் நுகர்வோர் சங்கங்களின் உருவாக்கம் ஊக்குவிக்கப்பட்டதுடன் 1992 இறுதியில் அத்தகைய 2,565 சங்கங்கள் 539 பள்ளிக்கூட நுகர்வோர் சங்கங்களுடன் சேர்ந்து தொழிற்பட்டன. நியாய வர்த்தக நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கும் நுகர்வோர் சுரண்டப்படுவதைத் தவிர்ப்பதற்குமான உள்நாட்டு வர்த்தகக் கண்காணிப்பின் ஒரு செயல் முறையாக உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் சந்தை அளவீடுகளையும், வர்த்தக, கூட்டுறவு நிலையங்களில் பரிசோதனைகளையும் மேற்கொண்டது.

போட்டி வர்த்தகத்தையும் அரசின் ஆகக் குறைந்த தலையீட்டையும் ஊக்குவிக்கும் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இவ்வாண்டில் அரச திணைக்களங்களின் வர்த்தக நடவடிக்கைகள் மிகக் குறைவாக விளங்கின. இதற்கேற்ப, பருப்பு வகை, வெங்காயம், சீனி, செத்தல் மிளகாய் என்பனவற்றை உள்ளடக்கிய மிக இன்றியமையாத உணவு விடயங்களை இறக்குமதி செய்வதற்குத் தனியார்துறை அனுமதிக்கப்பட்டது. இதன் கருத்து யாதெனில் கூ.மொ. விற்பனை நிலையத்தின் தனியுரிமை, கோதுமைத் தானியத்தின் இறக்குமதிகளுக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதாகும்.

1992 இல் நெற் சந்தைப்படுத்தும் சபையின் (நெ.ச. சபை) நடவடிக்கைகள் தொடர்ந்தும் மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டன. இவ்வாண்டில் நெ.ச. சபை 6,599 மெற்றிக் தொன் நெல்லையும் 50 மெற்றிக் தொன் சோளத்தையும் மொத்தமாகக் கொள்வனவு செய்தது.

நியாய வர்த்தக ஆணைக்குழுவின் நடவடிக்கைகளானவை (நி.வ. ஆணைக் குழு) போட்டியற்ற நடைமுறைகளைப் புலனாய்வு செய்தல், தனியுரிமைகள் மற்றும் இணைப்புக்களைக் கட்டுப்படுத்தல் என்பனவற்றிற்கு மட்டுப்படுத்தப் பட்டிருந்தன. நி.வ. ஆணைக்குழு, தேயிலை விலைகளைப் பாதகமான முறையில்

பாதித்த கொழும்பு தேயிலை ஏலங்களில் இடம்பெற்ற மோசடி விலைக் கோரல் பற்றியும் தேயிலைக் கலப்பு பத்திரம் (இலங்கைத் தேயிலைச் சபைக்கு ஏற்றுமதி யாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்றுமதிகள் மீதான விபரமான தகவல்களை உள்ளடக்கிய பத்திரமொன்று) என்பன தொடர்பாகத் தனியார் தேயிலைத் தொழிற்சாலை உடைமையாளர்களினால் செய்யப்பட்ட முறையீடுகளையும் புல னாய்வு செய்தது. இப் புலனாய்வுகளின் விளைவாக, தேவைப்பட்ட விபரங்களை மிகக் குறைந்த மட்டத்திற்குக் குறைத்தமை, நடைமுறைகளை இலகுபடுத்தி யமை, தேயிலைப்பைகளின் ஏற்றுமதிக்கான தேவைப்பாடுகளை வரையறுத்தமை என்பனவற்றின் மூலம் தேயிலைச் சபை நிவாரண வழிமுறைகளை மேற்கொண் டது.

உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகள் இரண்டிலும் விற்பனை செய்யும் பொருட்டுப் பண்டக் கொள்வனவுகள் திணைக்களம் (ப.கொ. திணைக்களம்) இறப்பர் சிறு உடைமையாளர்களிடமிருந்து நியாயமான விலைகளில் புகையூட்டப் பட்ட தட்டை இறப்பரைத் தொடர்ந்தும் கொள்வனவு செய்தது. இந் நோக்கத் திற்காக ப.கொ. திணைக்களம் முக்கியமாகப் பன்னாட்டு சந்தைக்கேற்ற விதத் தில் இறப்பரை வகைப்படுத்தித் தயாரிப்பதற்காக இறப்பர் வளரும் பிரதேசங் களில் பதின்னான்கு கொள்வனவு நிலையங்களையும், கொழும்பில் ஒரு மத்திய களஞ்சியச் சாலையையும் பேணியது. அத்துடன், 1992 இல் முக்கிய இறப்பர் வளரும் பிரதேசங்களில் நடமாடும் கொள்வனவு பணிகளைக் கொண்ட புதிய திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், திணைக்களம் இறப்பர் சிறு உடைமையாளர்களுக்கு மொத்த விற்பனை விலைகளில் போமிக் அமிலத் தைத் தொடர்ந்தும் வழங்கியது. இது சில்லறை விலையிலும் பார்க்க லீற்றர் ஒன்றுக்கு ரூ. 8—10 குறைவானதாக இருந்தது.

**வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை**

ஏற்றுமதி அமைப்பினைப் பன்முகப்படுத்துவதற்காகவும் கூடியளவு பெறுமதி கூட்டப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்ட ஊக்கு விப்புத் தொகுதியூடாக ஏற்றுமதியின் வேகத்தினை மேலும் வலுவாக்குவதில் கவனம் செலுத்துவதற்கேற்ற விதத்தில் இலங்கையின் தாராளமயமாக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை தொடர்ந்தது. வர்த்தகத்துடன் தொடர்பான கொள்கை நெறிபிறழ்வுகளை அகற்றும் நோக்குடன் இறக்குமதிகள் மீதான உரிமக் கட்டுப்பாடுகள் மேலும் தாராளமயமாக்கப்பட வேண்டுமென வலியுறுத் தப்பட்டவேளையில், ஏற்றுமதிகள் மீதான வரிச் சுமையைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இச் சீரமைப்புக்கள் உற்பத்திப் போட்டியினை யும் உற்பத்தியாளர் இலாபங்களையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் முக்கியத்துவம் வாய்ந்த மரபுவழி ஏற்றுமதித் துறையான பெருந் தோட்டங்களின் தொழிற்பாட்டு ஆற்றலினை அதிகரிக்கின்ற நோக்குடன் பெருந் தோட்ட முகாமைத்துவத்தினைப் பெருமளவில் மீளமைக்கின்ற நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டன.

**தீர்வைகளும் வரிகளும்**

ஏற்றுமதிகளின் பன்னாட்டுப் போட்டித் தன்மையை உயர்த்தும் நோக்குடன் முக்கிய மரபுவழி ஏற்றுமதிகளுக்குப் பொருந்தத்தக்க தீர்வைகள் பல தடவைகள் கீழ்நோக்கித் திருத்தப்பட்டதுடன் இறுதியாக அனைத்துவகை ஏற்றுமதித் தீர்வை களும் ஆண்டு இறுதியில் ஒழிக்கப்பட்டன. இதன்படி, 1992 நவெம்பர் 1 ஆம்

நாளிலிருந்து பயனுறும் வகையில் தேயிலை மீதான பெறுமான விகித விற்பனை வரி 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டவேளையில் அடிமட்ட விலை கி.கி. ஒன்றுக்கு ரூ. 65 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூ. 70 இற்கு உயர்த்தப்பட்டது. அத்துடன் தொகை வடிவிலான மற்றும் உறைகளிலடைக்கப் பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வைகளும் 1992 நவெம்பர் 7 இலிருந்து முறையே கி.கி. ஒன்றுக்கு ரூ. 1.00 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூ. 0.50 இற்கும், கி.கி. ஒன்றுக்கு ரூ. 0.50 இலிருந்து கி.கி. ஒன்றுக்கு ரூ. 0.25 இற்கும் குறைக்கப் பட்ட வேளையில் தேயிலைப் பைகளின் மீது கி.கி. ஒன்றுக்கு ரூ. 6 ஆக இருந்த தீர்வை ஒழிக்கப்பட்டது. அதேவேளை, 1992 திசெம்பர் 22 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் தேயிலை பெறுமான விகித விற்பனை வரியும் ஏற்றுமதித் தீர்வைகளும் ஒழிக்கப்பட்டன. மேலும் அதே நாளிலிருந்து பயனுறும் வகையில் தெங்கு மற்றும் இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வைகளும் ஒழிக்கப்பட்டன. எனினும், கி.கி. ஒன்றுக்கு ரூ. 2.00 இனைக் கொண்ட தேயிலை இறைத் தீர்வை தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தது.

ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, 1992 மேயில் அறிமுகப் படுத்தப்பட்ட, நான்கு படிமுறைகளைக் கொண்ட புதிய மொத்த விற்பனை வரி முறையின்கீழ் ஏற்றுமதி உற்பத்திகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களு க்கு மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அத்துடன் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள் பாதுகாப்புத் தீர்வையிலிருந்து தொடர்ந்தும் விலக்குப் பெற்றிருந்தன.

### இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு

தாராளமயமாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கைகளின் பின்னணியில், குறிப் பிட்ட இறக்குமதி, ஏற்றுமதிகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாடுகளுடன் தொடர்புற்ற நெறிபிறழ்வுகளை மிகக் குறைத்தல்மீது முக்கிய கவனம் செலுத்தப் பட்டது. 1992 செத்தெம்பரில், பழைய புதினத் தாள்களின் இறக்குமதி உரிமத் தேவைப்பாட்டிலிருந்து நீக்கப்பட்டது. மாறாக, 1992 யூனிலிருந்து விதை உருளைக்கிழங்கு மற்றும் உருளைக் கிழங்குகள் உரிமக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. தாவரநலத் தரத்தினைப் பேணும் விதத்தில் விதை உருளைக் கிழங்கிற்கு உரிமக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. உரிமக் கட்டுப்பாடு களின் கீழ் கொண்டுவரப்பட்ட ஏனைய இறக்குமதிகளாக நெல், அரிசி (ஓரளவு குற்றப்பட்ட, முழுமையாகக் குற்றப்பட்ட பழுப்புநிற அரிசி) சில இரசாயன உற்பத்திகள் (விலையுயர்ந்த கூழ்நிலை உலோகம், வெள்ளி நைற்றேற்று, தங்கக் கூறுகள் போன்றன உட்பட) என்பன காணப்பட்டன. ஏற்றுமதிகளைப் பொறு த்தவரை 1992 இல் எவ்வித மாற்றங்களும் இருக்காததுடன் முக்கியமாகச் சூழல் காரணங்களுக்காக 11 விடயங்கள் தொடர்ந்தும் உரிமக் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. இவ்விடயங்கள் சிலவற்றிற்கான இறக்குமதி ஏற்றுமதிகளுக்கு உரிமங் களைப் பேணுவதற்குத் தேவை எதுவுமில்லைப்போல் தோன்றுவதனால் இவ் விடயத்தை ஆராய்வதற்கு 1992 இல் சனாதிபதி தீர்வை ஆணைக்குழுவின்கீழ் சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது .

### கப்பற் கட்டண வீதங்கள்

1990 சனவரியில் கப்பற் பணிகள் தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர், கப்பற்படுத்தல் கைத்தொழிலில் பல மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன. மத்திய கிழக்கு நீங்கலாக அனைத்து நாடுகளுடனும் தொடர்பான ஏற்றுமதிகள் மீதான

கப்பற் கட்டண வீதங்கள், கப்பல் நிறுவனங்களுக்கிடையேயான அதிகரித்த போட்டியின் காரணமாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. உற்பத்தி வகை அடிப்படையில் ஐ. இராச்சியம் மற்றும் ஐ.அ. நாடுகளுக்கான தேயிலைக்குரிய கப்பற் கட்டணம் ஏறத்தாழ 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் கனடா, அவுத்திரேலியா, சிங்கப்பூர் என்பனவற்றிற்கான கப்பற் கட்டணங்கள் முறையே 15 சதவீதத்தினாலும், 37 சதவீதத்தினாலும், 17 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. இதே நாடுகளுக்கான இறப்பர், தேங்காய்த்துருவல், ஆடைகள், தும்பு என்பனவற்றிற்கான கப்பற் கட்டணத்திலும் இத்தகைய கீழ்நோக்கிய போக்கு அவதானிக்கப்பட்டது. மாறாக, வளைகுடாப் பிரதேசத்தின் குழப்ப நிலைமைகளின் காரணமாகக் கப்பல் நிறுவனங்களினால் மேலதிகக் கட்டணம் விதிக்கப்பட்டதன் விளைவாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கான கப்பற் கட்டண வீதங்கள் இவ்வாண்டில் அதிகரித்தன.

**ஏற்றுமதிகளுக்கான ஊக்குவிப்புகள்**

''ஏற்றுமதிகள் ஆண்டு—1992'' என்பதன் பின்னணியில் 1992 இல் ஏற்றுமதியாளர்களுக்குப் பல்வேறு கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.

1992 ஓகத்தில் ஏற்றுமதியாளர்கள் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். பின்னர் இவ் வசதி ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் செய்யப்பட்ட விதந்துரைப்புக்களின் அடிப்படையில் மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கும் உள்நாட்டு உள்ளீடுகளைப் பயன்படுத்தும் ஏற்றுமதியாளர்களுக்கும் ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையிலும் விரிவாக்கப்பட்டது.

1992 இல் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏற்றுமதியாளர்களுக்கு நிதியியல் உதவித் திட்டங்களைத் தொடர்ந்தும் வழங்கியது. ஒரு திட்டத்தின் கீழ், சிறிதளவு ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு 7 சதவீதம் கொண்ட சலுகை வட்டி வீதத்தில் ஆகக் கூடியது ரூ. 100,000 வரையிலான கடன்கள் வழங்கப்பட்டன. 1992 இல் இத் திட்டத்தின்கீழ் 15 செயற்றிட்டங்கள் நன்மையடைந்தன. இன்னொரு ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை குறுங்கால அடிப்படையில் 12 சதவீத வட்டி வீதத்தில் தனிப்பட்டோர் கடனாக ஆகக் கூடியதாக ரூ. 10 இலட்சத்தினை வழங்கியது. ஏற்றுமதிகளின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான கடன்களாக ''முன்னோடிக் கைத்தொழில்கள்'' என்ற வகைப்படுத்தலின்கீழ் ஆகக்கூடிய தனிப்பட்ட கடனாக ரூ. 10 இலட்சம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் வழங்கப்பட்டது. அத்துடன், புதிய உற்பத்திகளை அல்லது பணிகளை அபிவிருத்தி செய்கின்ற, உருவாகும் நிலையிலுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஆராய்ச்சி அபிவிருத்திக்கான செலவினது மீளளிப்பின் ஒரு பகுதியாக ரூ. 21 இலட்சம் கொண்ட கடன்கள் வழங்கப்பட்டன. இவ்வாண்டின் முக்கிய நன்மை பெறுநர்களாக மருந்தூட்டப்பட்ட காளான்கள் மற்றும் தென்னந் தும்பை அடிப்படையாகக் கொண்ட மலர்ச்சாடிகள் என்பனவற்றின் உற்பத்தியாளர்கள் விளங்கினர்.

இயல்பாகவேயுள்ள பலவீனங்களை வெற்றிகொள்வதற்கும் ஏற்றுமதிப் பொருட்களுக்கான தீர்வையற்ற உள்ளீடுகளை நாடுவதற்குச் சிறந்த வழிகளைப் பெற்றுக்கொள்ளுவதற்குமாக ஏற்றுமதிப் பொருட்களுக்கான தீர்வையற்ற உள்ளீடுகளை ஊக்குவிக்கும் திட்டங்கள், தீர்வைத் தள்ளுபடித் திட்டம், தயாரிப்பிற்காகச் சுங்கப் பிணையிலிடப்பட்ட திட்டம், பொறிகளைத் தீர்வையின்றிச் சுங்கத்திலிருந்தும் அகற்றும் திட்டம் என்பன 1992 இல் திருத்தப்பட்டு இலகுபடுத்தப்பட்டன. இத்திட்டங்களில் பெரும்பாலானவை மறைமுக ஏற்றுமதியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டன. இவ்வாண்டில் மூன்று திருத்தப்பட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவையாவன சுங்க மற்றும் வரி தள்ளுபடித் திட்டம், தயாரிப்புக்காகச் சுங்கப் பிணையில் களஞ்சியப்படுத்தி வைக்கும் திட்டம், ஒப்புதலளிக்கப்பட்ட மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்களின் தீர்வையும் வரியுமற்ற இறக்குமதிகள் என்பனவாம். இம் மூன்று திருத்தப்பட்ட திட்டங்களுக்கும் புறம்பாக, இரு புதிய திட்டங்கள் 1992 செத்தெம்பரில் புகுத்தப்பட்டன. இவை தயாரிப்பு, ஏற்றுமதிகள் என்பனவற்றுக்கான பொருட்களின் தற்காலிக இறக்குமதி, பொருட்கள் திட்டத்தின் தீர்வையற்ற பதிலீடு என்பனவாகும். ஆடைத் தயாரிப்பாளர்களும் மறைமுக ஏற்றுமதியாளர்களும் இத்திட்டங்களிலிருந்து நன்மை பெற உரித்துள்ளவராவர். அனுமதிப் பங்கற்ற ஆடைகளை ஏற்றுமதி செய்வோருக்கான 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மட்டுமே ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு உதவித் திட்டம் (ஏ.அ.மு.தி.) தொழிற்பாட்டிலிருந்தது.

ரூ. 100 இலட்சத்திற்குக் குறைவான முதலீட்டைக் கொண்ட வேளாண்மை, கடற்றொழில், கைத்தறிப் புடவைகள், கிராமியக் கைத்தொழில்கள், கைப்பணி, வர்த்தக இல்லங்கள், கனிம மென்கல தொழில் முயற்சிகள் ஆகிய துறைகளின் செயற்றிட்டங்களுக்கு இக் கைத்தொழில் செயற்றிட்டம் ஒவ்வொன்றும் தமது உற்பத்திகளில் 70 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவினை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் கொ.பெ.பொ.ஆ./மு.ச. தகுநிலை வழங்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் ஐந்து வருட வரி விடுப்பு, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள், பொறிகள், கருவிகள் என்பவற்றைத் தீர்வையின்றிப் பெறக்கூடியமை, வெளிநாட்டு நாணயக் கடன்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.

நாணய, நிதியியல் ஊக்குவிப்புக்களுடன், இவ்வாண்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவக ரீதியான உதவி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக ஏற்றுமதி ஊக்குவிப்பு வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. தேசிய எற்றுமதி அபிவிருத்தித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முக்கிய நிறுவனமான ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தொழில்நுட்ப முன்னேற்றங்கள், புதிய சந்தைகளுக்குள் ஊடுருவிச் செல்லல் என்பவற்றின் மூலம் ஏற்றுமதிச் செயல்முறைகள், சந்தைப்படுத்தல், பொதியிடல், உற்பத்தி அபிவிருத்தி போன்றவை பற்றிய அறிவாற்றலை உயர்த்துவதற்காக ஏற்றுமதியாளர்களுக்குப் பல உள்நாட்டு வெளிநாட்டுக் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்கு செய்தது. மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு அவர்கள் வெளிநாட்டு வர்த்தகச் சந்தைகளிலும் கண்காட்சிகளிலும் பங்குபற்றுவதற்காகப் பல்வேறு துறைகளில் உதவியது. பழங்கள், காய்கறிகளை ஏற்றுமதி செய்யும் வளமார்ந்த ஆற்றலைக் கொண்ட ஏற்றுமதியாளருக்குத் தரம் மீதான தேவைப்பாடுகள், கையாளல், பொதியிடல், ஏற்றியிறக்கல் போன்றவை மீதான தனிப்பட்ட ஆலோசனைப் பணிகளையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வழங்கியது.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இறக்குமதி/ஏற்றுமதி செயல்முறைகளை ஒழுங்கு படுத்தும் நோக்குடன் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்துடனும் இலங்கைச் சுங்கத்துடனும் இணைந்து கட்டுநாயக்கா சருவதேச விமான நிலையத்தில் வைரக்கல் நிலையம் ஒன்றை நிறுவியது. அறுவடைக்குப் பின்னான தொழில் நுட்பக் கூறினை நிறுவியதன் மூலம் பழங்கள் காய்கறிகளின் தரத்தினை உயர்த்துவது பற்றிய ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்றுமதி அபிவிருத் திச் சபையும் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து மேற்கொண்டன. மேலும், யப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன் நடுத்தர, சிறிய அளவு இறப்பர்க் கைத்தொழில்களுக்கான பொருத்தமான தொழில் நுட்பத்தினைப் பரப்பும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் மேற்கொள்ளப் பட்டது. இத்துடன் மேற்கு ஐரோப்பாவில் இறப்பர் உற்பத்திகளுக்காக சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெற்ற உதவியுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபை வெளிநாட்டுச் சந்தை அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல திட்டங்களுடனும் நிகழ்ச்சித் திட்டங் களுடனும் ஈடுபட்டிருந்தது.

1992 நவெம்பரில் இலங்கையின் முதலாவது பன்னாட்டு வர்த்தகச் சந்தை, ‘எக்ஸ்போ—92’ நடைபெற்றது. இது இலங்கையின் ஏற்றுமதிகளை உலக அரங்கில் வெளிப்படுத்துவதற்கு ஒரு முக்கிய சந்தர்ப்பத்தை வழங்கியது. 23 பரந்த துறைகளிலிருந்து பரந்த அளவிலான மரபுரீதியான மற்றும் மரபு வழியற்ற பொருட்களையும் பணிகளையும் காட்சிக்கு வைத்து 340 விற்பனைக் கூடங்களை ‘எக்ஸ்போ—92’ வழங்கியதன்மூலம் 46 நாடுகளிலிருந்து 3,600 வெளிநாட்டு வாங்குநர்களையும் முதலீட்டாளர்களையும் கவர்ந்தது. ரூ. 4.3 பில்லியன் பெறுமதி கொண்ட உறுதிப்படுத்தப்பட்ட கட்டளைகளை உருவாக்குவதில் இக் கண்காட்சி வெற்றி கண்டது. ‘எக்ஸ்போ—92’ உடன் ஒன்றுபடும் விதத்தில் முதலீட்டுச் சபையினால் முதலீட்டுக் கருத்தரங்கொன்றும் நடாத்தப்பட்டு பெருந்தொகையான உள்ளார்ந்த ஆற்றலைக் கொண்ட முதலீட்டாளர்கள் கவ ரப்பட்டனர்.

ஏற்றுமதியாளர்கள், வங்கி உத்தரவாதங்கள், காப்புறுதித் திட்டங்கள் என்ப வற்றின் மூலம் இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தினால் (இ.ஏ.கொ.கா.கூ.) உதவப்பட்டனர். வழங்கப்பட்ட வங்கி உத்தர வாதங்களின் எண்ணிக்கை 21 சதவீதத்தினால் அதிகரித்து 179 ஆக விளங்கிய வேளையில் அத்தகைய உத்தரவாதங்களின் பெறுமதி 1992 இல் 13 சதவீதத் தினால் அதிகரித்து ரூ. 4,800 இலட்சமாக விளங்கியது. ரூ. 50 இலட்சத்தை விஞ்சாத ஆண்டுப் புரள்வினைக் கொண்ட சிறிய அளவு ஏற்றுமதியாளருக்கு உதவுமுகமாக ‘ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் காப்புறுதிக் கொள்கை’ எனப்படும் புதிய திட்டம் ஒன்றினையும் இ.ஏ.கொ.கா.கூட்டுத்தாபனம் நடைமுறைப் படுத்தியது.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களமும் தமது ஊக்குவிப்புத் திட்டங் களினூடாக ஏற்றுமதியாளர்க்கு ஆதரவளித்தது. இதன்படி காசுக் கொடுப்பனவு களையும் தேவையான மூலப்பொருட்களையும் வழங்கும் பயிர் உதவித் திட்டத் தினால் கோப்பி, ஏலக்காய், மிளகு, சாதிக்காய், சாதிக்காய் எண்ணெய் உற்பத்தி யாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இத்துடன் வளமாக்கிச் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் கறுவா, கோப்பி, கொக்கோ, மிளகு உற்பத்தியாளர் களுக்கு வளமாக்கிக் கொடை வழங்கப்படுகின்றது.

**வர்த்தக ஒழுங்குகளும் வர்த்தக உறவுகளும்**

வர்த்தகத் தடைகளை நீக்குவதன் மூலம், உலகளாவிய பல்புடை வர்த்தக அமைப்பினைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தீர்வைகள் மற்றும் வர்த்தகம் பற்றிய பொது உடன்படிக்கை (தீ.வ.பொ.உ.) உட்பட, பொரு ளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தகம் மீதான பல பல்புடை அமைப்புக்களில் இலங்கை ஒரு உறுப்பினராகவுள்ளது. தீ.வ.பொ.ச. இன் கீழான முதல் ஏழு சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகளும் தீர்வைகளைக் குறைத்தல், இல்லா தொழித்தல் மற்றும் தீர்வையற்ற கட்டுப்பாடுகள் என்பவற்றுடன் சம்பந்தப் பட்டிருந்த வேளையில் இத் தொடரில் எட்டாவதான உருகுவே சுற்று வட்டம் 1992 இல் புடவையும் ஆடைகளும், வேளாண்மை, பணிகளின் வர்த்தகமும், வர்த்தகத் தொடர்புடைய துலாம்பரமான சொத்து உரிமைகள், தீ.வ.பொ.உ. உடனான முதலீட்டு வழிமுறைகள் என்பவற்றை ஒருங்கிணைப்பதில் கவனம் செலுத்தியது.

வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் உறுப்பினர் என்ற வகையில் இலங்கை 1992 பெப்புருவரியில் கொலம்பியாவில் நடைபெற்ற எட்டாவது கூட்டத் தொடரில் பங்குபற்றியதுடன் பல்புடை உடன் படிக்கை மயமாக்கத்திற்கு ஓர் உறுதியானதும் தெளிவானதுமான கடப்பாட்டைக் கோரியது. இலங்கைப் பன்னாட்டு கோப்பி உடன்படிக்கை, இயற்கை இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் அமைப்பு, பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன் படிக்கை என்பனவற்றினதும் ஓர் உறுப்பினராக இருந்தது.

இலங்கை பிராந்திய வர்த்தக வாய்ப்புக்களை விரிவாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட பிராந்திய உடன்படிக்கைகளிலும் ஈடுபட்டது. பாங்கொக் உடன்படிக்கையின்கீழ் இலங்கை குறிப்பிட்ட ஏற்றுமதிகளுக்கு முன்னுரிமைத் தீர்வைகளைப் பெற்றிருக்கையில் உறுப்பு நாடுகளிலிருந்தான குறிப்பிட்ட இறக்கு மதிகளுக்கும் அதே சலுகையினை வழங்குகின்றது. இத்துடன் பிராந்திய ஒத் துழைப்புக்கான தெற்கு ஆசிய அமைப்பின் (சார்க்) உறுப்பினராக இருந்து, பிராந்தியத்தினுள் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் உயர்ந்த மட்டங்களை அடைவதில் ஒரு படிக்கல்லாக ஒவ்வொரு உற்பத்தியினதும் அணுகு முறையைப் பின்பற்றிச் சார்க் முன்னுரிமை வர்த்தகப் பிரதேசமொன்றை நிறுவு வதற்கான பேச்சுவார்த்தைகளில் இலங்கை பங்குபற்றியது.

இலங்கை தீ.வ.பொ.உ. இன் அனுசரணையின் கீழான பேச்சுவார்த்தைக்கு இணங்கச் செய்துகொள்ளப்பட்ட பல்புடை தும்பு உடன்படிக்கையின் ஏற்பாடு களின் நியதிகளின்படி ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐ.பொ. சமூகம், கனடா, நோர்வே, பின்லாந்து ஆகிய நாடுகளுடன் இரட்டை உடன்படிக்கைகளில் சேர்ந்து கொண்டது. இவ் உடன்படிக்கைகள் ஒவ்வொன்றின் கீழும் ஒவ்வோர் நாட்டிற்கு மான குறிப்பிடப்பட்ட வகையான ஆடை ஏற்றுமதிகள் மீதான அளவுக் கட்டுப் பாட்டு மட்டங்கள் குறித்துரைக்கப்பட்டன. ஐக்கிய அமெரிக்க நாடுகளுடன் முன்னர் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1992 யூன் 20 இல் முடிவுபெற்ற துடன், இதற்கு மேலும் இரண்டு வருடங்களால் 1994 யூன் வரைக்கும் மேலுமொரு கால நீடிப்பு வழங்கப்பட்டது. ஐ.பொ.ச. கனடா, பின்லாந்து என்பவற்றுடன் நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள் 1994 இறுதியில் முடிவடைய இருப்பதுடன் நோர்வேயுடனான ஒப்பந்தம் 1993 இறுதி வரைக்கும் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறையின் கீழ் (பொ.மு.மு.) இலங்கை முன்னுரிமை பெறக்கூடிய தன்மையைப் பெறுகிறது. பொதுவான நியதிகளில், பொ.மு.மு. இன் கீழ் இலங்கையின் வர்த்தக உள்ளடக்கம் 1991 இன் ரூ. 129 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 132 இலட்சத்திற்கு அதிகரித்தது. மேலும், பொதுவாக்கப்பட்ட வர்த்தக முன்னுரிமை முறையின் (பொ.வ.மு.மு.) மீதான ஒப்பந்தத்திலும் இலங்கை கையொப்பமிட்டது. எனினும், உற்பத்திப் பொருளின் உள்ளடக்கம் போதுமானதாக இல்லாமை, தீர்வைகள் மீதான ஆழமான வெட்டு என்பன காரணமாக பொ.வ.மு. முறையின் கீழ் உள்ளடக்கப்பட்ட பொதுவான வர்த்தகம் 1992 இல் தொடர்ந்தும் மிதமாக விளங்கியது.

இலங்கைக்கும் இந்தியா, பாகித்தான், ஈரான், லிபியா, எகிப்து, ருமேனியா, சீனா, மாலைதீவு, துருக்கி, வங்காளதேசம் என்பனவற்றை உள்ளடக்கிய பன்னிரண்டு வெளிநாடுகளுக்கிடையேயும் வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை முன்னேற்றுவதற்காக வலுவான கருவியாகத் தொழிற்பட்ட இருபுடை ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இலங்கை கைச்சாத்திட்டது. 1992 இல் பொருளாதாரம் மற்றும் வர்த்தக ஒத்துழைப்புக்கான இலங்கை—சீனக் குழுவின் முதற்றொடர், பொருளாதார ஒத்துழைப்பு மீதான இலங்கை—ஈரான் இணைப்பு ஆணைக்குழுவின் மூன்றாம் தொடர் மற்றும் வர்த்தகம், நிதி முதலீடு என்பன மீதான இலங்கை—இந்திய துணைக் குழுவின் இரண்டாம் தொடர் என்பன நடாத்தப்பட்டன.

**சுற்றுலா***

இவ்வாண்டில் சுற்றுலாத்துறை கவர்ச்சிகரமான செயலாற்றத்தைக் காட்டி, சுற்றுலா வருகைகளில் 24 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதன்படி, 1992 இல் சுற்றுலா வருகைகள் 393,669 ஆக விளங்கி, 1984 இன் பின்னரான அதிகூடிய மட்டமாக இருந்தது. சுற்றுலா இரவுகளின் எண்ணிக்கை 4,000,000 ஆக மதிப்பிடப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டைவிட 20 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது.

கிழக்கு ஐரோப்பா மற்றும் பொதுநலவாய சுதந்திர சோவியத் நாடுகள் தவிர்ந்த எல்லா முக்கிய பிரதேசங்களிலிருந்துமான வருகைகள் 1992இல் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. கடந்த காலங்களைப் போன்றே மேற்கு ஐரோப்பா முன்னணிச் சந்தையென்ற அதன் முன்னணி நிலையைத் தொடர்ந்தும் பேணியதுடன் அதன் சந்தைப் பங்கை 1991 இன் 60 சதவீதத்திலிருந்து 1992 இல் 63 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா, வருகைகள் 1991 இல் பதிவு செய்யப்பட்ட 13 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து 1992 இல் 246,393 ஐ அடைந்து 28 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன.

* பகுப்பாய்வு சுற்றுலாச் சபையால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின் அடிப்படையிலான.

1991 இல் மொத்த வருகையில் 30 சதவீதத்திற்குப் பொறுப்பாக இருந்த இரண்டாவது பெரிய சந்தையான ஆசியாவிலிருந்தான வருகைகள் 1992 இல் அதன் பங்கில் சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டி 29 சதவீதமாக விளங்கின. ஆசியாவிலிருந்தான வருகைகளின் எண்ணிக்கை 18 சதவீதத்தால் அதிகரித்தது. கூடிய பாய்ச்சல்கள் முக்கியமாக ஜப்பான் (23 சதவீதம்), இந்தியா (28 சத வீதம்), தாய்வான் (48 சதவீதம்), மலேசியா (90 சதவீதம்), சிங்கப்பூர் (30 சதவீதம்) ஆகிய நாடுகளில் முக்கியமாகப் பிரதிபலித்தது. இதேவேளை அவுத்திரலாசியா, வட அமெரிக்காவிலிருந்தான வருகைகள் முறையே 29 சத வீதத்தாலும், 31 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தன. கிழக்கு ஐரோப்பாவி லிருந்தான வருகைகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, முன்னைய ஆண்டைவிட 1992 இல் 23 சதவீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டியன.

1992 இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூ. 86,670 இலட்சமாக (சிஎஉ 1,400 இலட்சம்) மதிப்பிடப் பட்டதுடன், இது முன்னைய ஆண்டின் வருவாய்களைவிட 34 சதவீதம் (சிஎஉ நியதிகளில் 23 சதவீதம்) கொண்ட கவர்ச்சிகரமான வளர்ச்சியைக் கொண் டிருந்தது.

1992 இல் சுற்றுலாக் கைத்தொழிலினால் வழங்கப்பட்ட மொத்தத் தொழில்நிலை 71,507 ஆக மதிப்பிடப்பட்டதுடன், இது 1991 இன் 8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. இது 30,878 நேரடித் தொழில் வாய்ப்பினையும் துணைத் துறைகளில் காணப் பட்ட 40,629 மறைமுக தொழில்வாய்ப்பினையும் உள்ளடக்கியிருந்தது.

தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் சுற்றுலா விடுதிக் கூறுகளின் எண் ணிக்கை 1991இன் 122 இலிருந்து 1992 இல் 127 இற்கு மேலும் விரிவடைந்தது. இதனால் மொத்த அறை இயலளவு 1991 இல் 1 சதவீதம் கொண்ட சிறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.5 சதவீதத்தால் 1992 இல் 10,214 அறைகளுக்கு அதிகரித்தது. இதேவேளை, தரமிடப்பட்ட தங்குமிடத்துறையில் அறைகளில் தங்கும் ஆண்டு வீதம் 1991 இன் 48 சதவீதத்திலிருந்து 1992 இல் 55 சத வீதத்திற்கு அதிகரித்தது. துணைத் தங்குமிடத்துறையில் காணப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையும் இவ்விரு ஆண்டுகளிடையே 109 இலிருந்து 128 இற்கு அதிகரித்து 17 சதவீத வளர்ச்சியை எடுத்துக் காட்டியது.

பயண வகைகளின் அடிப்படையில் அட்டவணையிடப்பட்ட பறப்புக்களால் வந்த சுற்றுலா வருகைகள் 24 சதவீதத்தால் அதிகரித்தன. அட்டவணையிடப் பட்ட பறப்புக்களில், பிரதேசங்களுக்கிடையிலான பறப்புக்கள் 26 சதவீதம் கொண்ட ஓர் முனைப்பான வளர்ச்சியைப் பதிவுசெய்திருக்கையில், பிரதேசங் களுக்குள்ளேயான பறப்புக்கள் 18 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. எயர் லங்கா மூலமான வருகைகளின் எண்ணிக்கை இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 20 சதவீதத்தால் அதிகரித்தது.

## அட்டவணை 1.43

## சுற்றுலாப் புள்ளி விபரங்கள் 1991 – 1992

| விடயம் | 1991 | 1990 இனைவிட % மாற்றம் | 1992 (அ) | 1991 இனைவிட % மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. சுற்றுலாப் பயணிகளின் வருகை... ... | 317,703 | + 6.7 | 393,669 | + 23.9 |
| 2. பிரதேச அடிப்படையிலான வருகைகளின் எண்ணிக்கை | | | | |
| 2.1 ஐரோப்பா ... ... | 196,809 | + 11.3 | 250,035 | + 27.0 |
| 2.1.1 பிரான்ஸ் ... ... | 36,801 | + 11.1 | 40,227 | + 9.3 |
| 2.1.2 சேர்மனி ... ... | 65,226 | + 10.3 | 85,443 | + 31.0 |
| 2.1.3 இத்தாலி ... ... | 18,897 | – 1.8 | 25,575 | + 35.3 |
| 2.1.4 ஐ.இ. ... ... | 31,011 | + 42.2 | 34,602 | + 11.6 |
| 2.1.5 ஏனையவை ... ... | 44,874 | + 3.0 | 64,188 | + 43.0 |
| 2.2 வட அமெரிக்கா ... ... | 9,615 | + 18.9 | 12,615 | + 31.2 |
| 2.2.1 கனடா ... ... | 3,306 | + 35.9 | 4,104 | + 24.1 |
| 2.2.2 ஐ அ. நாடுகள் ... ... | 6,309 | + 12.0 | 8,511 | + 34.9 |
| 2.3 ஆசியா ... ... | 96,654 | – 3.3 | 114,162 | + 18.1 |
| 2.3.1 யப்பான் ... ... | 23,403 | + 4.5 | 28,797 | + 23.0 |
| 2.3.2 இந்தியா ... ... | 20,352 | + 55.9 | 25,944 | + 27.5 |
| 2.3.3 பாகித்தான் ... ... | 10,392 | + 36.7 | 11,481 | + 10.5 |
| 2.3.4 கொங்கொங் ... ... | 8,397 | – 70.2 | 8,370 | – 0.3 |
| 2.3.5 ஏனையவை ... ... | 34,110 | + 18.4 | 39,570 | + 16.0 |
| 2.4 அவுத்திரலாசியா ... ... | 9,747 | + 9.3 | 12,363 | + 26.8 |
| 2.3.1 அவுஸ்திரேலியா ... ... | 8,802 | + 8.3 | 10,995 | + 24.5 |
| 2.4.2 நியூசிலாந்து ... ... | 861 | + 14.9 | 1,161 | + 34.8 |
| 2.4.3 ஏனையவை ... ... | 84 | + 133.3 | 207 | – 146.4 |
| 2.5 ஏனைய பிரதேசங்கள் ... ... | 4,878 | + 21.0 | 4,494 | – 7.9 |
| 3. நோக்கங்களின்படியான வருகைகள் ... | 317,703 | + 6.7 | 393,669 | + 23.9 |
| 3.1 களியாட்டம் ... ... | 310,714 | + 11.9 | 373,215 | + 20.1 |
| 3.2 வியாபாரம் ... ... | 5,719 | – 62.5 | 15,510 | + 171.2 |
| 3.3 ஏனையவை ... ... | 1,270 | – 1.2 | 4,944 | + 289.3 |
| 4. சுற்றுலா இரவுகள் ('000) ... ... | 3,336 | + 8.7 | 4,000 | + 19.9 |
| 5. இன்பப்பயணிகளின் வருகை ... ... | 2,665 | – 32.6 | வி.கி. | வி.கி. |
| 6. மூலங்களின்படி மொத்தச் சுற்றுலாப் பெறுகைகள் (ரூ.ப.இ.) (அ) ... ... | 6,436 | – 21.4 | 8,500 | 32.1 |
| 7. மொத்த தொழில் வாய்ப்பு ... ... | 64,507 | + 7.5 | 67,200 | + 4.2 |
| 7.1 நேரடி ... ... | 26,878 | + 7.5 | 28,000 | + 4.2 |
| 7.2 மறைமுக ... ... | 37,629 | + 7.5 | 39,200 | + 4.2 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலாச் சபை.
இலங்கை மத்திய வங்கி